பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆவணி 18 றமழான் 18 இதழ் 203
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 3-9-77

யாழ். கலவரமரண

## விசாரணைமுடிந்தது 19ம் திகதி தீர்ப்பு!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணக் கலவரத்தில் பலியான இருவரின் மரண விசாரணை நேற்று முடிவடைந்தது. இம்மாதம் 19ந் தேதி காலை தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

இவ்விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் கே. வி. நவரத்தினம் முன்னிலையில் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்றுவந்தது.

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களான ஆனந்தவேல், பாக்கியராசா ஆகிய இருவரின் மரண விசாரணையே நடைபெற்றுவந்தது. இறந்தவர்களின் நலனைக் கவனிக்கச் சட்டத்தரணிகள் எஸ். நடராசா, ஜிம்மி இராசரத்தினம், ஆர். விஸ்வநாதன் த. சோமசுந்தரம், எஸ். லோகேஸ்வரன், ஏ. அன்றனி, சிவா. கணேசன், பி. யேசுதாசன், ரி. சற்குணநாதன் ஆகியோர் ஆஜரானுர்கள். பொலிஸ் தரப்பில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சில்வா ஆஜரானுர். (க)

# அமைதி திரும்புகிறது, பிரச்னை தீருமா?

## பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலம்பற்றி கவலை

யாழ்ப்பாணம், சனி

**நாடு முழுவதும் மீண்டும் அமைதி திரும்பிக் கொண்டிருப்பதாகவும், பல இடங்களில் வழமைபோல் மக்கள் கடமைகளை ஆரம்பித்து விட்டதாகவும் செய்திகள்வந்துகொண்டிருக்கும்அதேசமயம், வன்முறைகளினுல் உடைமைகளையும், உத்தியோகங்களையும், கைவிட்டு தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள மக்களின் எதிர்காலம்பற்றிய பிரச்னைகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.**

நாட்டின் பல பகுதிகளிலும் கடைகளில் ஈடுபட்டிருந்த டாக்டர்கள், பொறியியலாளர்கள். அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்ற பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருந்தவர்கள் மாத்திரமின்றி, சொந்தத் தொழில்களிலும், வர்த்தகங்களிலும், ஈடுபட்டிருந்த பலரும் நிர்க்கதிக்குள்ளாகி வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இவர்களில் அனேகர், தமது சொத்துக்கள், வீடுவாசல்களை இழந்தும் கைவிட்டும் வந்துள்ளனர். இன்னும் பலர்வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எதுவிதத் தொடர்புமற்றவர்கள்.

இவர்கள் அனைவரதும் எதிர்காலம் பற்றி பல்வேறு சமூக நல ஸ்தாபனங்களும, சங்கங்களும் ஆராயத் தலைப்பட்டுள்ளன.

அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் தொழில் புரிந்து வன்முறைகளினுல் பாதிக்கப்பட்டு வடக்குத் திரும்பியுள்ளவர்களின் அடுத்த நடவடிக்கை பற்றிய கூட்டமொன்று இன்று காலை 9 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அகதிகளாக நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்து முகமாக ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை, பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர்களும் முக்கியஸ்தர்களும் ஒரு கூட்டத்தை நடத்தவிருக்கிறுர்கள்.

இதேசமயம் வேறு பல சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும் அகதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால நலன்பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவிருக்கின்றன.

குறிப்பாக அகதிகள் முகாம்களிலுள்ள மக்களின் நிலைமை பற்றியே இந்தப் பொதுஸ்தாபனங்கள் கவலைகொண்டுள்ளன.

மேலும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் வன்முறைகளினுல் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த தமிழ் மக்களின் நிலைமை குறித்து அரசாங்கத்திடம் 5அம்ச மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தைப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸவை திரு. அமிர்தலிங்கம் இன்னும் சில தினங்களில் சந்திக்கவிருக்கிறுர்.

### வாசகர்களுக்கு!

பத்திரிகை தாள் தட்டுப்பாடு, போக்குவரத்து, விநியோக கஷ்டங்கள் போன்ற இன்னோரன்ன சிரமங்களுக்கிடையிலும் 'ஈழநாடு' பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பதை வாசகர்கள் உணர்வீர்கள்.

பல காரணங்களால் கடந்த சில நாட்களாக பத்திரிகையில் பக்கங்கள் குறைவாக வெளிவர நேர்ந்தது. என்றுலும் வாசகர்களுக்கு எம்மால் முடிந்த அளவு திருப்தியளிக்கும் விதத்தில் செய்திகளை வெளியிட்டு வருகிறேம். பத்திரிகை தாள் தட்டுப்பாட்டின் காரணமாக பத்திரிகையின் அளவு சிறிது குறுக்கப்பட்டுள்ளபோதிலும் செய்திகளை அதிகமாக வழங்குவதற்கு பெரு முயற்சி எடுக்கப்படுகின்றது.

விரைவில் நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கின்றேம். அதுவரை தொடர்ந்தும் வாசக நேயர்கள் எம்முடன் ஒத்துழைக்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேம். (ஆ-ஈ)

## அகதிகளுக்கு வேலைவாய்ப்பு கூட்டுறவாளர்களின் முயற்சி

யாழ்ப்பாணம், சனி

நாட்டில் நடைபெற்ற வன்செயல்களினுல் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு வேலைவாய்ப்பளிப்ப தற்கான திட்டமொன்றை உருவாக்குவது பற்றி ஆலோசிப்பதற்காக வலி. வடக்கு பகுதியில் இயங்கும் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் அவசரக் கூட்டமொன்று நாளைக் காலை 9-00 மணிக்கு நரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளைத் தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. சி. நவரத்தினமும், பண்டத்தரிப்புப் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. இ. இராசசுந்தரமும் மேற்கொண்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் உடனடியாக மூன்று லட்சம் ரூபாய் நிதி திரட்டி, கைத்தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்படவிருக்கின்றது. இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்குச் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பொது முகாமையாளர் உட்பட ஐந்து பணியாளர்களைத் தெரிந்து ஆலோசனை வழங்குமாறு அமைப்பாளர்கள் கோரியுள்ளனர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமை புரியும் ஒவ்வொரு ஊழியரும் தமது ஒரு மாத வேதனத்தின் அரைவாசியை வழங்கி, அச்சங்கங்கள் முற்பணமாகத் தமது இருப்பு நிதியிலிருந்து இத்தொகையை வழங்கவேண்டும். ஊழியர்களின் சம்பள அன்பளிப்பை அவர்களிடமிருந்து சிறுதொகையாக மாதாமாதம் சங்கங்கள் கழிப்பதனுல் அது ஊழியர்களைப் பாதிக்காதென அமைப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (தெ)

## பிரஜைகள் குழு அகதிகள் நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கும் நிவாரணத்துக்குமென பிரஜைகள் குழுவினுல் ஆரம்பிக்கப்பட்ட நிவாரண நிதிக்கு இதுவரை ரூபா 26,915-41 சேர்ந்துள்ளது.

நிதி அனுப்புவோர் திரு. லங்கா நேசையா (வர்த்தக வங்கி முகாமையாளர்) அல்லது திரு. ஆர். ஜே. குணரத்தினம் (சிமா சில்க் இன்டஸ்றீஸ் அதிபர்) ஆகியவர்களுக்கு அனுப்பலாம். அகதிகள் நிவாரணநிதி வங்கி இல: 3840க்கு நேரடியாகவும் செலுத்தலாம்.

இதுவரை சேர்ந்துள்ள நிதி விபரம்:

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த தொகை: | 16,864-00 |
| இலங்கை தேவாலய சபை, கொழும்பு | 3,000-00 |
| நவீன சந்தை வர்த்தகர் சங்கம் | 1,500-00 |
| மானிப்பாய் கி. சபை 6, 7 வட்டார மக்கள் | 1,887-31 |
| வஸந்தபுரம் சில்க் நிறுவன ஊழியர்கள், நீராவியடி | 100-00 |
| மில்க்வைற் தொழிலக ஊழியர்கள் | 1000-00 |
| ரி. தம்பிராஜா, ஊரெழு | 200-00 |
| எஸ். நடராஜா, கொழும்புத்துறை | 250-00 |
| கே. முத்துவேல்பிள்ளை, மானிப்பாய் | 500 00 |
| எஸ். பொன்னையா ஊடாக, திருநெல்வேலி | 42-60 |
| திருமதி ஏ. சிதம்பரநாதன், சுண்டுக்குளி | 300-00 |
| டாக்டர் டபிள்யு. எஸ். நதேனியல், ஆனைக்கோட்டை | 100-00 |
| சுண்டுக்குளி ச. சமூகநிலையம் | 623-00 |
| பெண்கள் இல்லம், மருதனுமடம் | 100-00 |
| சுண்டுக்குளி வண. ஜே ஜே. ஞானப்பிரகாசம் ஊடாக | 92-50 |
| உத்தரிய மாதா கோவிலடி மக்கள் வசாவிளான் | 255-00 |
| செல்வி வி. கனகதுங்கம், சுண்டிக்குளி | 25-00 |
| ஏ. சவிரிமுத்து, யாழ்ப்பாணம் | 25-00 |
| எஸ். எம். முத்துவாப்பா அன் சன்ஸ் | 51-00 |
| மொத்தம் | 26,915-41 |

# இவர்களுக்கு இலவச கல்வி

யாழ்ப்பாணம், சனி

ஊர்காவற்றுறைத் தொகுதியில் கரம்பொன், நாரந்தனை, ஊர்காவற்றுறை முதலிய இடங்களில் அகதிகளாக வந்துள்ள மாணவர்கள் தமது கல்வியை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்குக் கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலய அதிபர், திரு.ரீ.நடராஜா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இம் மூன்று பகுதிகளையும் சேர்ந்த அகதிகளாக வந்துள்ள மாணவர்களுக்கு 1ம் வகுப்புத் தொடக்கம் 12ம் வகுப்புவரை தமது பாடசாலையில் இலவசமாகக் கல்வி பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் இக் கல்விவசதி தேவைப்படும் பெற்றோர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அதிபர் திரு. நடராஜா வேண்டுகோள்விடுத்துள்ளார். (கா.அ)

## முஸ்லிம்களுக்கு பேரீந்து

யாழ்ப்பாணம், சனி

முஸ்லீம்களின் புனித ரம்ழான் பெருநாளையொட்டி யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு போதிய பேரீந்து வழங்கப்பட வேண்டுமென அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்க யாழ். கிளைத் தலைவர் ஜனாப் ஏ. ஏ. எம். ஜலீல், அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ.எல். விஜயபாலாவைக் கோரியுள்ளார். அரசாங்க அதிபர் இது விடயமாக உடன் நடவடிக்கை எடுத்து முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள ப. நோ, கூ. சங்கமூலமும் அங்கீகாரம் பெற்ற சில்லறைக் கடைகள் மூலமும் பங்கீட்டு அட்டைக்கு விநியோகம்செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளார். (கெ)

## நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

வாடகைக் குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்தும் அல்லது துன்புறுத்தும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

நாட்டில் தற்போது நிலவும் நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வீட்டுச் சொந்தக்காரர்கள் பலர் குடியிருப்பாளர்களைச் சட்டவிரோதமாக அப்புறப்படுத்தவும், தொல்லைகள் விளைவிக்கவும் முனைகின்றனரெனத் தமக்குக் கிடைத்த பல புகார்களையடுத்து தேசிய வீடமைப்பு ஆணையாளர் இவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளார்.

ஏற்கனவே கிடைத்த புகார்கள் தொடர்பாகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

தபால் நிலையத்தில்

# பணத்துடன் இரும்புப் பெட்டி திருட்டு

சுழிபுரம், வெள்ளி

உப-தபாற்கந்தோர் ஒன்று உடைக்கப்பட்டு சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பணம், முத்திரைகள் மற்றும் பொருட்கள் இரும்புப் பெட்டியுடன் திருடரால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொல்புரம் உப-தபாற்கந்தோரில் இடம் பெற்றுள்ளது.

இத்தபால் நிலையத்தின் பின்பக்கச் சுவரில் இருந்த ஜன்னலைப் பெயர்த்து உள்ளே நுழைந்த திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இத்துணிகரத் திருட்டுத் தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட புகாரையடுத்து சங்கானைப் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (உ)

# கல்வி அமைச்சில் நட்புறவுத் திட்டம்

கொழும்பு, புதன்

நாட்டின் சகல இன மத மக்களிடையேயும் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்க கல்வி அமைச்சு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இத்திட்டத்திற்கமைய சிங்கள மாணவர்கள் தமிழ்மாணவர்கள் மத்தியிலும் தங்கள் விடுமுறைக்காலங்களைக் கழிக்க நடவடிக்கைஎடுக்கப்படுகிறது.

பிரதிக் கல்வி அமைச்சர் திரு லயனல் ஜெயதிலகாவின் ஆலோசனையின்பேரில் இத்திட்டத்தை கல்வி அமைச்சு எடுக்க உள்ளது.

இத்திட்டத்திற்கமைய முதலில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ்மாணவர்கள் கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் உள்ள சிங்கள மக்கள் மத்தியில் தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்பட உள்ளது இவர்கள் தேசிய நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர். (இ)

பாவனையாளர்கள்:

# அடுத்தசில வாரங்களுக்குள் கூப்பன்களை மாற்றலாம்

கொழும்பு, வெள்ளி

அடுத்த சில வாரங்களுக்குள் பாவனையாளர்கள் தம் விருப்பப்படி தம் பங்கீட்டுப் புத்தகங்களை அங்கீகரிக்கப்பட்ட கடைகளுக்கு மாற்றிக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 12ம் திகதி வரை கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

500க்கு அதிகமான கூப்பன்கள் கடைகளில் இருந்தாலும் அது தாக்கத்தை ஏற்படுத்தாது என்றும் இத்தொகைக்கு அதிகமான கூப்பன் காரர்க்கும் பங்கீட்டுப்பொருட்கள் வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

விவசாயிகளிடமிருந்து:

# செத்தல் மிளகாய் ரூ9வீதம் திணைக்களம் வாங்கும்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் செத்தல் மிளகாயை றாத்தல் 9 ரூபா வீதம் வாங்குவதற்கு வடபகுதி விற்பனைத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

வடபகுதி விற்பனைத் திணைக்களம் காய் கறிசேகரிப்பு நிலையங்கள் மூலம் சுன்னாகம், சாவகச்சேரி, வேலணை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இன்று முதல் செத்தல் மிளகாய் கொள்முதல் செய்யப்படும் என யாழ். விற்பனை இலாகா உதவி ஆணையாளர் தெரிவித்தார். முதல்தர மிளகாய் றாத்தல் 9 ரூபா மூலம் கொள்முதல் செய்யப்படும் என்றும் விவசாயிகள் நேரடியாக இந்நிலையங்களுக்கு மிளகாயை கொண்டுவந்து கொடுக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இதேசமயம் யாழ்ப்பாணத்திலிருந்து 1,900 அந்தர் செத்தல்மிளகாயை 15 லொறிகள் மூலம் கொழும்புக்குக்கொண்டு செல்ல சந்தைப்படுத்தும் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது,

நாட்டில் ஏற்பட்டுள்ள செத்தல்மிளகாய்த்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்தியாவிலிருந்து செத்தல் மிளகாயை இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பம்பாய் வெங்காயமும் இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகிறது. (க)

## பொலிசாரும் பிரமுகர்களும் ரோந்து

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண ரோந்துக்காவலில் பொலிசாருடன், பொதுஜன பிரமுகர்களும் நேற்றிரவு ஈடுபட்டனர். யாழ்ப்பாண செயலகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு நடவடிக்கை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவிற்கமைய பொலிசாருடன் பொதுஜன பிரமுகர்கள் ரோந்துக்காவலில் ஈடுபடுவதென முடிவுசெய்யப் பட்டது. காவலில் ஈடுபட்டனர்.

பொதுஜனஇயக்கபிரமுகர்களான, ரோட்டறிக்கழக சார்பில் திரு. ஆர்.ரி.குணரெட்னம், (சீமாஸ் சில்க் அதிபர்) லயன்ஸ் கழக சார்பில் டாக்டர் சுப்பிரமணியம், டாக்டர் யோகு. பசுபதி கொமெசல் பாதுகாப்புசேவை அதிபர் திரு ச.பாலச்சந்திரன் ஆகியோர் ஈடுபட்டனர். (கெ-உ)

## பாம்புக்கடிக்கு இலக்கானர்

அரியாலை, வெள்ளி

விஷப்பாம்பினால் தீண்டப்பெற்று இரு தினங்கள் மயக்க நிலையிலிருந்த ஒருவர் சிகிச்சையின்பின் குணமடைந்து வருகிறார் யாழ். பெரியாஸ்பத்திரியில்காவலாளியாகப் பணிபுரியும் எஸ். சின்னத்துரை என்பவரே விஷம்தீண்டியவராவார்.

செட்டிநாகம் தீண்டி அறிவு நினைவற்ற நிலையில், வெட்டுக்குளம் வீதியைச் சேர்ந்த விஷக்கடி வைத்தியரிடம் எடுத்துச் செல்லப்பட்ட இவர் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகிறார். (அ)

“சட்டக் கல்லூரி:

# பரீட்சையை ஒத்திவைக்கவும்”

யாழ்ப்பாணம், சனி

எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவிருக்கும் சட்டக் கல்லூரிப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு சட்டக்கல்லூரித் தமிழ்மன்றம் சட்டக்கல்லூரி அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது

இப்பரீட்சைக்கு தமிழ்மாணவர், மாணவியர் தோற்றமுடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை உருவாகியுள்ளதால் இப்பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு மன்றப் பொதுச்செயலாளர் திரு. அ. சிறிஹரன் தந்திமூலம் கல்லூரி அதிபரைக் கேட்டுள்ளார். (உ)

# “முகமூடியைக்களைந்துஇதய சுத்தியுடன் வாழவேண்டும்”

அரியாலை, வெள்ளி

“தேவசாயலாக நாம் இருப்பதால் மனிதருக்குச் சேவை செய்யக் கடவுள் தன்னுடைய பிள்ளைகளாக எம்மைஉலகிற்கு அனுப்பியுள்ளார் இறைவனின் வழிநடத்தல் எம்மில் இல்லாவிட்டால் நாம் தேவ மனிதரல்ல. தேவனுடைய மகிமையை கிறிஸ்துவின் முகத்தில் கண்டேன் என்று பவுல் சொல்லியிருப்பதை நாம் நினைவுகூரவேண்டும்”

இவ்வாறு யாழ்ப்பாணம் பரியோவான் ஆலயத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் கலந்துகொண்ட கொழும்பு அத்தியட்சாதீன ஆயர் வண சிறில் அபயநாயக்கா ஆண்டகை பேசுகையில் குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

“முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்ந்தமையால் கிறிஸ்வர்கள் என அழைக்கப்பட்டனர்

“4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அவர்களின் எதிரிகள் மத்தியில் ஒருவரோடு ஒருவர் அன்பு கொண்டவர்களாக வாழ்ந்து காட்டினார்கள். 12-ம் நூற்றாண்டில சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்ட பொழுதிலும் கிறிஸ்தவர்கள் அன்பும், தயவும், இரக்கமும் கொண்டவர்களாக வாழ்ந்தார்கள். அன்று அரசன்-அடிமை என்ற பேதம் இருந்த பொழுதிலும் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகள் என்ற மன நிறைவுடன் வாழ்ந்தார்கள் இந்தக் கொள்கையும் அடிப்படைத் தத்துவமும் நாகரீகத்தின் உச்சப்படியிலிருக்கும் இன்றைய மக்களிடம் ஏற்படவேண்டும். இந்த முகமூடியினால் அமையும் எமது வாழ்க்கையில் நாம் தேவனுடைய வழிநடத்துதலை மறைக்கிறோம்.”

ஆயருடன், யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வண ஜே. ஜே ஞானப்பிரகாசமும் இணைந்து நன்றி தெரிவிக்கும் ஆராதனையை நிறைவேற்றினர். (அ)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், சனி

நவாலி மகா வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் யாழ். வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய அதிபர் திரு வே. தம்பையா வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## யாருடைய லைசென்ஸ்

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியில் கடமையாற்றும் ஞா. மாணிக்கம் என்பவர் யாழ். கஸ்தூரியார் வீதியில் குளத்திற்கு முன்பாக நேற்று மோட்டார் சாரதி லைசன்ஸ் புத்தகம் ஒன்றைக் கண்டெடுத்து ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

சென்னை பஸ் வேலைநிறுத்தம்:

# தமிழகத்தில் 6-ந் திகதி பொது வேலைநிறுத்தம்

## தி.மு க., ஜனதா, காங்கிரஸ், கம்யூ. ஏற்பாடு

சென்னை, செப். 2

தற்போது நடைபெற்று வரும் பல்லவன் போக்குவரத்து ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தவிர்ந்த நான்கு கட்சிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு முழுவதும் பொதுவேலை நிறுத்தம் செய்யவுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி, பாரத கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் தொழிற்சங்கங்கள் இப்போது வேலைநிறுத்தத்தை நடத்தவுள்ளன.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதில் கலந்துகொள்ளாது.

**கல்யாணசுந்தரம் கூட்டிய மாநாடு**

பாரத கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் சென்னையில் நேற்றுக் கூட்டியிருந்த சர்வகட்சி மாநாட்டில் மேற்படி பொதுவேலைநிறுத்த முடிவு எடுக்கப்பட்டது.

தி. மு. க. தலைவர் கலைஞர் மு கருணாநிதி, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. டி. கே. தங்கமணி, ஜனதா கட்சியைச் சேர்ந்த நாராயணன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சடகோபன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்று இம்மாநாட்டில் திரு. கல்யாணசுந்தரம் வலியுறுத்தினர்.

**எம். ஜி. ஆர். கூற்றுக்கு மறுப்பு**

பஸ் ஊழியர் வேலைநிறுத்தத்திற்கு அரசியல் நோக்கம் உள்ளது என்ற தமிழக முதல்வரின் கூற்றை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியம் மறுத்துள்ளார்.

இது தொழிலாளரின் நெடுநாள் கோரிக்கை என்று அவர் தெரிவித்துள்ளார். குறுகிய அரசியல்நோக்கம் இதில் இல்லை என்பதாலேயே தமது கட்சி மேற்படிசர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வேலை நிறுத்தம் தொடர்பாக கைதானோர் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும்

[6-ம் பக்கம் பார்க்க]

## பாக். வேட்பாளர்களுக்கு சொத்துவிபர நிபந்தனை

இஸ்லாமாபாத், செப். 2

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பாகிஸ்தானில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் கடந்த ஏழு ஆண்டுகளில் தாம் சம்பாதித்த சொத்து விபரங்கள் பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

தமது சொத்து விபரங்களை வேட்பாளர்கள் வெளியிடத் தவறினால் அவர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் என்று ஜெனரல் ஹக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**இராணுவச் சட்ட உத்தரவு**

அடுத்த சில நாட்களில் இராணுவ அரசின் சட்ட உத்தரவு வெளியிடப்படும் என்று ராவல்பிண்டியில் நிருபர்கள் மத்தியில் பேசிய ஜெனரல் ஹக் கூறினார். இந்த சட்ட உத்தரவு ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் வேட்பாளர்களை பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

ம. கி. பிரச்னை:

## இஸ்ரேல் புதிய திட்டத்தை வெளியிடும்

லண்டன், செப். 2

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக உத்தேச சமரசத் திட்டம் ஒன்றினை வெளியிடவிருக்கிறது என்று இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் மோஷே தயான் தெரிவித்தார்.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பேசிய அவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தவர்களுடன் பேசுவதில்லை என்றும் ம. கி. பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தைகள் எதிலும் கலந்துகொள்வதில்லை என்றும் இஸ்ரேல் முடிவுசெய்துள்ளதாகவும் தெரிவித்தார். (உ)

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். நீதிமன்ற நலன்புரிச் சங்கம், வட பகுதியிலுள்ள முகாம்களிலுள்ள அகதிகளுக்கு உதவுவதென தீர்மானித்துள்ளது. பதிவாளர் கா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

சீனத்தலைவர்களுடன்

## யூகோ. ஜனாதிபதி தொடர்ந்து பேச்சுவார்த்தை

பீக்கிங், செப் 2

யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ நேற்று பீக்கிங்கில் சீனத்தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவுகள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தனர்.

சகல பொதுப் பிரச்னைகளிலும் சமாதானத் தீர்வுகாண முடியும் என்று இரு நாட்டுத் தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்தனர். யுகோஸ்லேவிய அதிகாரி ஒருவர் கூறினார்.

## இந்திய வெளிநாட்டுக் கொள்கை பற்றி பிரதமர்

புதுடில்லி, செப். 2

ஒரு நாட்டுடனான நட்புறவு பாதிக்கக்கூடிய விதத்தில் இந்தியா மற்றைய நாடுகளுடன் உறவுகொள்ள மாட்டாது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனதா அரசு மண்டல சார்பின்மையே தமது கொள்கை என்று கூறிவரும் அதேவேளையில், மேற்கு நாடுகளின் பக்கம் சார்ந்து நிற்கின்றது என்ற காங்கிரஸ் கட்சியின் குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கையிலேயே திரு. தேசாய் மேற்கண்டவாறு கூறினார்.

**ஜெயப்பிரகாஷர் பற்றிக் கருத்து**

இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், மகாத்மா காந்தியைவிட உயர்ந்தவர் என்று இப்போது கருதப்படுகிறார் என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, ஜெயப்பிரகாஷர் பொது வாழ்வில் தமக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றிருக்கிறார் என்று திரு. தேசாய் கூறினார். (இ)

## இத்தாலி கோரிக்கை

லண்டன், செப் 2

ஐரோப்பிய பொருளாதாரச் சந்தை நாடுகளுடன் ஸ்பெயினும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று இத்தாலி கோரியுள்ளது. (உ)

## ஜமேய்க்கா முடிவு

லண்டன், செப். 2

ஆபிரிக்கக் கண்டத்தில் மேலும் பல தூதரகங்களை நிறுவ ஜமேய்க்கா முடிவு செய்துள்ளது. (உ)

## இலங்கைக்கும் அழைப்பு

கொழும்பு, வெள்ளி

மேற்கு ஜெர்மனியில் உள்ள பிராங்போர்ட்டில் நடைபெறவிருக்கும் விளையாட்டுத்துறை நிபுணர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 3 ம் திகதியில் இருந்து 30 ம் திகதிவரை இம்மாநாடு நடைபெறும். (உ)

பல்கலைக்கழக வேந்தர் பதவியிலிருந்து

## இந்திராவை விலக்காவிடின் கிளர்ச்சி நடவடிக்கை

### மாணவர்கள் எச்சரிக்கை

புதுடில்லி, செப். 2

பல்கலைக்கழக வேந்தர் பதவியிலிருந்து இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை விலக்க வேண்டும் என்று ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழக மாணவர்கள் அரசைக் கோரியுள்ளனர்.

தமது ஆட்சிக் காலத்தில் மாணவர்களுக்குப் பலத்த கட்டுப்பாடுகளை விதித்து அவர்களின் துயரங்களுக்கு காரணமாக இருந்த திருமதி காந்தி, தொடர்ந்து பல்கலைக்கழக வேந்தர் பதவியிலிருப்பது எதுவிதத்திலும் பொருத்தமாகாது என்றும் மாணவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கையை நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் தாம் கிளர்ச்சி நடவடிக்கையில் இறங்குவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் மாணவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.


யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 9-9-1977 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாண, மாநகர ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) யாழ்ப்பாணம், வசு நிலையத்தின் முன்பாக 26 கடைகள்.

(ஆ) யாழ்ப்பாணம், பெரியகடைச் சந்தையில் 104 கடைகள்.

2. கேள்வி வைப்புப்பணமாக ரூ. 200/-யும், ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படமுடியாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூ. 50/-யும் செலுத்தியதன் பேரில், 8-9-1977 நண்பகல் 12-00மணி வரை யாழ்ப்பாண, மாநகர பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் மீதே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். தேவையான உடன்படிக்கைகளில் சித்திபெற்ற கேள்விக்காரர் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணமான ரூ. 200/- மீளளிக்கப்படும்.

3. கேள்விகள் அனைத்தும் இரு பிரதிகளில், அரக்கு முத்திரையிடப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட உறைகளில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விகளைத்தாங்கிவரும் உறைகள் மாநகர ஆணையாளர், நகர மண்டபம், யாழ்ப்பாணமென முகவரியிடப்பட்டு, விடயத்துக்கேற்ப உறையின் இடதுபக்க மேல்மூலையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டனவாகவிருத்தல்வேண்டும்.
(அ) "யாழ்ப்பாண வசு நிலையத்தின் முன்பாக 26 கடைகள்"
(ஆ) "யாழ்ப்பாணம், பெரிய கடைச் சந்தையில் 104 கடைகள்"

4. பதிவுசெய்யப்பட்டிருப்பதற்குச் சான்று காண்பிக்கப்படும்பட்சத்தில், மாநகரசபையிடம் அல்லது பொதுவேலைத் திணைக்களத்திடம் ரூபா பத்து இலட்சத்துக்குக் (ரூ. 10,00,000) குறையாத தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தகாரருக்கு மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

5. 9-9-1977 ஆம் திகதி பி. ப. 3-30 மணிக்கு, மாநகர ஆணையாளரது அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் சமயம் சமூகமாகவிருப்பதற்குக் கேள்விக்காரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

6. அத்தகைய கேள்விகளுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் சகலவற்றிற்கும் கண்டிப்பாக அமைந்திருந்தால் அல்லாது எந்தவொரு கேள்வியும் ஆலோசிக்கப்படமாட்டாது.

7. மேல் குறிப்பிடப்பட்ட (அ), (ஆ) வுக்கான- இரு வேலைகளுக்கும் வெவ்வேறான கேள்விகளே சமர்ப்பிக்கப்படுதல வேண்டும்.

8. சித்திபெற்ற கேள்விக்காரர், கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியில் இருந்து இரண்டரை மாதகாலத்துக்குள் (2 1/2 மாதம்) வேலையைப் பூர்த்திசெய்வதற்குப் பொறுப்பேற்றல் வேண்டும்.

9. மேற்கொண்டு தேவைப்படும் விவரங்கள், நிபந்தனைகளை மாநகர பொறியியலாளரிடம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
யாழ்ப்பாணம்,
01-09-1977.

6958

# "தன்னுயிர் போல் பிற உயிர்களை நேசியுங்கள்"

## குருபாபா வேண்டுகோள்



யாழ்ப்பாணம், சனி

கருணை இதயம் பொருந்திய மனித சமுதாயம் தன்னுயிரைப் போல் பிற உயிரையும் விசுவாசித்து வாழவேண்டும்''

இவ்வாறு நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மைகுறித்து குருபாபா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

''கருணை இதயம் பொருந்திய மனித சமுதாயத்தின் அன்பர்களும், விசுவாசிகளும் உயிர்கள் மீது கருணையும் சகல படைப்புக்கள்மீது இரக்கமும், தன்னுயிர்போல பிற உயிரையும் விசுவாசித்து சமமாகக்காணும் அன்பு உடையவராகவும் மனித சமுதாயத்திற்குப் பொறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். அது மாத்திரமல்ல பொறுமை, கருணை, சமாதானம் என்பன மனிதனுக்கு அவசியம் தேவையான முக்கிய அம்சங்களாகும்.

அத்தோடு சமத்துவ உரிமை நிலையை மனிதன் அடிப்படையாக தன் இதயத்தில் உருவாக்கவேண்டும். அந்த நிலையில் மக்கள்பணியையும் இறைவன் பணியையும் தன்னலம் அற்று பேதங்களை மறந்து சாதி, மத இரத்தபாசத் தொடர்புகளற்று நீதி, நெறியின் வழுவாது மனச்சாட்சி மனிதர்களுக்கு சாட்சிபகர, அந்த மனச்சாட்சியின்படி தன்னை விசாரித்து தன் குற்றங்களையும் தன் பிறவியிலிருந்து தான் தான் செய்த குற்றங்களையும் ஆராய்ச்சி செய்து ஒழுகவேண்டும்.

அப்படி உணர்ந்துபார்த்தால் மற்றவர் குற்றம் என்னை நாம் காண முடியாது; நம் குற்றத்தையே காண முடிகிறது. நாம் செய்த குற்றம் தான் மற்றவரும் செய்ததாக விளங்கும். அதனால் முதற்குற்றவாளி நாம் என்பதும் இரண்டாம் குற்றவாளி நம்மைப் பார்த்துச் செய்தவன் என்பதும் நாம் செய்தவற்றையே அவனும் செய்கிறான் என்பதும் புலனாகும்.

நாம் முந்திச் செய்ததை அவன் பிந்திச்செய்தான் என்பதுதான் கருத்து. இதனால் மனிதன் தன்னை நிதானித்து பின்வரும் நிலையையும் நிதானித்து வருங்காலம், சென்றகாலம், நிகழ்காலங்களையும் சிந்தித்துச்செயலாற்ற வேண்டும்.

மனித சமுதாயம் அப்படி நடந்தால் இந்த உலகம் என்பது பொன்விளைகிறதாயிருக்கும். மனித சமுதாயங்கள் ஒரே குலம் ஒரே இனம், ஒரே தெய்வம் என்பதை உணர்ந்து சிந்தித்தால்,சீவித்தால் எவ்வித குற்றங்களுக்கும், அல்லல்களுக்கும், பழிபாதகங்களுக்கும் ஆளாகமாட்டார்கள்.

சாத்வீகமுறையில்சமாதானமான நெறியில் சத்தியநீதிவழிகளைக் கையாண்டு நடப்பது எப்போதும் நற்பயனைத் தரும். கருணை நிறைந்த சொற்களை அன்புமயமாகப்பேசவேண்டும். இதை ஒவ்வொருவரும்சிந்தித்துச்செயலாற்றுவதுசிறப்புடையதாகும். மண்ணை ஆள்வது பெரிதல்ல பூமியை ஆண்டு வானத்தில் பறந்து மறைந்து உலாவுவதும்பெரிதல்ல. மனிதனுடைய இதயம் என்கிற உலகம் இருக்கிறதே இதை ஒருவர் ஆள்வதுதான் கடினம். இந்த மன உலகத்தை ஆழ அறிந்தவனுக்கு-இதை ஆண்டவனுக்குத்தான் கிருஷ்டிகளின் உலகத்தை ஆள்வது சுலபம். அப்படி ஆண்டுவிட்ட ஒருவன் தான இந்த அன்பு உலகத்தை ஆளலாம், கருணை உலகத்தை ஆளலாம்.

சண்டைபோடுவதும், பாகுபாடு காட்டுவதும், தான், நீ என்று பிரித்துக்கொள்வதும், நாட்டை ஆள்வதும் பெரிய காரியமல்ல. உயிர்கள் மீது கருணையும், ஒற்றுமையும்,நல்ல பண்பும், சகிப்பும், சமாதானமும் கொண்டு மக்கள் இதயம் மகிழத்தான் இதயம் கனிந்து பணிசெய்வதே சிறந்ததொண்டாகும். இப்பேர்ப்பட்ட பணியே இறைவன் ராஜ்யத்தின்பணித் தொண்டாகும்.

மனிதர்கள் நாட்டையும், காட்டையும், உலகத்தையும் ஆளத்துணியுமுன்னர் தாம் மனிதர்களாக நடந்து நற்சிந்தனைகளையும், நற்குணங்களையும், நல்லொழுக்கத்தினையும், அன்பையும், சமாதானத்தையும், நீதியையும், சத்தியத்தையும் கையாண்டு தமது கடமைகளையும், இறைவன் பணியையும், மக்கள் பணியையும் இதயம் திறந்து செய்ய முயற்சி எடுப்பது நல்லது. இதனால் நாட்டில் நீர்வளம் பெருகும், மக்கள்துன்பம்தீரும்,பசிப்பிணி அகலும், மனத்துயர்கள் விலகும். சாந்தி, சமாதானம் நிலவும். தெய்வ அருள் பொங்கும். நிகரற்ற அன்பு உலகில் விருத்தியாகி, துன்பங்கள் அகன்று, இன்பமும் சாந்தியும் மனித இதயங்களில் நிறைந்து கொண்டிருக்கும்.

பஞ்சசீலக்கொள்கையின் நிலையை உயிர்களில் நிலைப்படுத்துமாறு புத்தர் பெருமான் ராஜ்யத்தைத் துறந்து வெளியேறினார். அந்த நிலையைப் புத்த தர்மம் என்று சொல்கிறோம். அவர் கடவுளைப்பற்றிய பேச்சை அங்கே பேசவில்லை. தான தர்மங்களைப் பற்றியும் மனிதர்களுடைய கருணையைப் பற்றியும் உயிர்கள்மீது காட்டவேண்டிய கருணைபற்றியும் அவர் விளக்கம் செய்துள்ளார்.

ஆகையால் மண்ணுக்காக நாம் சண்டைபோட்டுக்கொள்ளுதல் இரத்தம் சிந்தி, இனிய உயிர்களை அழித்தொழித்தலாகிய பாவச்செயலினை மேற்கொள்ளாது, மனித சமுதாயம் நீதியிலும், உண்மையிலும் ஒன்றுபட்டு வாழவேண்டும். மனித இதயத்திலே நீதியும், உண்மையும், கடவுளும் ஒன்றுபட்டுவாழுமாயின் அந்நிலையே உலகத்திற்கும்மக்களுக்கும்நமக்கும் சாந்திதரக்கூடியதொன்றாகும். இதை மக்கள் சமுதாயம் உணரவேண்டுமென்றுதாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் எல்லோரும் நீதிவழியில் நடக்கவேண்டும் என்றும் மிகவும் தாழ்மையாகவும் மன்றாட்டமாகவும் கேட்டுக்கொள்கின்றேன். (கா-உ)

# "மனதைப் பக்குவப்படுத்தும் ஒரேதுறை விளையாட்டு"

யாழ்ப்பாணம், சனி

''விளையாட்டுத்துறை ஒன்றுதான் மனிதர்களின் மனத்தை வெற்றி தோல்விக்கு பக்குவப்படுத்துகிறது. வாழ்க்கைக்குப் பயிற்சியும் அதனால் ஏற்படுகிறது'' என்று பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இல்ல விளையாட்டுப் போட்டி முடிவில் அதிபர் திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேசிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் கல்வி ஆலுநர் ஜனாப் உவைஸ் அகமது சொன்னார்.

அதிபர் திரு. கந்தசாமி பேசுகையில், 'பலாலிக் கலாசாலை இலங்கைக் கல்வித்துறையில் பெரும்சாதனை நிலைநாட்டிய நிலையம். அத்துடன் விளையாட்டுத்துறையில் ஆசிரிய மாணவர்கள் சாதனைபுரிந்து வருகின்றனர். இனிவரும் வருடங்களிலும் அனேகசாதனைகளைப்புரியவிருக்கின்றனர்' என்றார்.

வெற்றி பெற்றவர்கட்கு ஜனாப் உவைஸ் அகமது பரிசுகளை வழங்கினார். (அ)

சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் ரோட்டுத் தெற்கு,
கொழும்பு - 10
போன்: 24261-5

## துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி

காலி,வெள்ளி

உடுகமவைச்சேர்ந்த ஹோமடொல தோட்டத்தைச் சேர்ந்த 36 வயதுள்ள கந்தன் பெரியண்ணனின் மரணம் சம்பந்தமாக உடுகம திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எல். ரி. ஞானானந்தா விசாரணை நடத்தினார்.

கந்தன் பெரியண்ணன் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

தமிழ் தோட்டத் தொழிலாளர்களை ஒருகும்பல் கடுமையாகத் தாக்கியதென்றும் இதன்விளைவாகவேகந்தன் பெரியண்ணன் காலமானார் என்றும் வேறுநாலுபேர் காலிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுள்ளது)

வெற்றுச்சாக்கு
கேள்வி
விண்ணப்பம்

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கிறது.

முடிவு திகதி: 7-09-'77.

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கு பெ. இர சரத்தினம்
பொதுமுகாமையாளர்
74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்.
1977-09-1. 6953

## முதலாண்டு நினைவாஞ்சலி

### திருமதி இரத்தினம்பிகை நல்லையா

தோற்றம்: 29-3-1916

மறைவு: 14-9-1976



(இன்று சிரார்த்தம்)

எங்கள் இல்லத்தின் அணையாச் சுடரே
என்றும் எங்கள் உள்ளத்தில் உறைவாய் தாயே!

தெய்வமாய் அமர்ந்து சாந்தி அருள வேண்டி நிற்கும்

சின்னத்தம்பி நல்லையா (கணவன்), விருத்தாசலம், அருணகிரிநாதன், நல்லநாதன், வரதலெட்சுமி, யோகநாதன், லோகநாதன் மக்கள்), க. குணரெத்தினம், ஞானம்பிகை (மருமக்கள்), விஜேந்தினி, சுதாகரன், பிரபாகரன், நிஸந்தினி, குணவதி, வரதராசன், மைதிலி, பானுமதி, சியாமளா ஆகியோரின் பேத்தியார்.

65, சிவன்பண்ணை வீதி, கொட்டடி — யாழ்ப்பாணம்.

6959

**நாகம்மஸ்**
(சுன்னுகம்)
தினசரி 2-30, 6-30
ரஞ்சன் — அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30
ஏ.வி.எம் ராஜன்-பானுமதி
**பத்துமாதபந்தம்**

**ராணி**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
**பெண் தெய்வம்**

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
**பட்டணத்தில் பூதம்**
(கறுப்பு வெள்ளைப் பிரதி)
9-ந் திகதி முதல்
சிவகுமார்
சுஜாதா
**அன்னக்கிளி**

**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-30
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி**
யாழ். நகர்
போன்: 7642
ஃ எம். ஜி. ஆர்.
ஃ சாவித்திரி நடித்த
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
**வேட்டைக்காரன்**

**வெலிங்டன்**
[யாழ். நகர்]
தினசரி 10 30, 2-30 மாலை 6-30, 9-30
விஜயகுமார் ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
போன்: 7698
ஜெய்சங்கர் — சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**வின்ஸர்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30
போன்: 7180
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**கைகொடுத்த தெய்வம்**

**Regal** (Jaffna)
Daily at 10-30, 4.30 p m
Adventure and Excitement for the whole Family
CHARLTON HESTON in
**CALL OF THE WILD**
(Color)


# வரி விளம்பரம்

## பயிற்சி

வெளிநாடுகளில் வேலைகள் பெற அரசாங்கத்தால் தனியார்துறை தொழிற்பயிற்சி நிலையமென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஒரே தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுங்கள். வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), மோட்டார் மெக்கானிசம், PMG Certificate, City & Guilds. விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும். National Institutes மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6943

## காணவில்லை

எனது தந்தையாரும் முன்னை நாள் யாழ்ப்பாணம் சிங்கப்பூர் கபே உரிமையாளரும், புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான சோமசுந்தரம் வேலாயுதம் என்பவரை 18-8-77 முதல் காணவில்லை. கடைசியாக வவுனியாவில் காணப்பட்டார். பொதுநிறமும் மொட்டையான தலையும் உடையவரான இவர் 6 அடி உயரமும் 77 வயதினருமாவார். கடைசியாக சாரமும் துவாயும் அணிந்திருக்கக் காணப்பட்டார். வே. தவராஜலிங்கம். கோண்டாவில் என்ற முகவரிக்கு தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 6918

## பிஸ்கால் விற்பனை

வழ: இலக்கம்: 13107
மாவட்டமன்று பருத்தித்துறை
கரவெட்டி மேற்கு கதிர்காமக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள். வழக்காளி
விரோதமாக
தெல்லிப்பளை மாவிட்டபுரம் தாரிசுவளவு
(1) சுப்பிரமணியம் துரைசிங்கம்
(2) பெண் இராசேஸ்வரி
எதிராளிகள்

| | |
|---|---|
| முதல் ரூபா | 3000-00 |
| வட்டி | 1240-00 |
| மொத்தம் | 4240-00 |

இதில் சொல்லப்பட்ட தொகையை எதிராளிகள் வழக்காளிக்கு கட்டும்படி தீர்ந்த தீர்வைப்பிரகாரம் கீழ் காணப்படும் ஆதனத்தில் உரித்தையும் பிரயோசனத்தையும் 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதி காலை 10 மணியளவில் பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது. அதாவது

### அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயில் பற்று கரணவாய் இளகாமக் குறிச்சியிறை பட்சந்தை நெற்பர 46 எல்லை கிழக்கு சிதம்பரநாதர் சரவணமுத்துவுக்குரிய வாதனம், வடக்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்குரிய வாதனம், மேற்கு கறுவல் முத்துவுக்குரியவாதனம், தெற்கு கந்தையா இராமலிங்கத்துக்குரியவாதனம் இவ்வெல்லைக் குட்பட்டவைகளில் சொரியலாய் அரைவாசி.

**தம்பையா மகேந்திரன்**
பிஸ்கால்
மாவட்டமன்று,
பருத்தித்துறை. 6954

## விற்பனைக்கு

வவுனியா - மன்னர் வீதியில் நல்ல கேந்திர நிலையத்தில் (17ம் கட்டையில்) 30 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு பயிர்ச் செய்கைக்கோ மில் (அரிசி ஆலை) ஸ்தாபிக்கவோ சிறந்த இடம். தொடர்பு கொள்க. ஆனந்தா ஸ்டோர்ஸ், உயிலங்குளம். 6949

குடி நிலமும், விவசாய நிலமும் வடக்கில் விற்பனைக்கு உண்டு. எழுதுங்கள். ரவீந்திரன் சோடா ஒழுங்கை, மல்லாகம். 6937

## தேவை

வடக்கில் கைத்தொழில் வாய்ப்பு உண்டு. சிறு முதலீட்டுடன் வருவோர் எழுதுங்கள், ரவீந்திரன் சோடா ஒழுங்கை, மல்லாகம். 6936

1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதிநிருவாகச்
**சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழான இடைக்காலக்கட்டளை**
இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப்
**பொறுப்பாளர் முன்னிலையில்**

காலஞ்சென்ற கந்தப்பசேகரர் இரத்தினசபாபதி என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துச்சம்பந்தமாக

காலஞ்சென்றவர் கந்தப்பசேகரர் இரத்தினசபாபதி கைம்பெண் நாகேஸ்வரி இல. 28 ஒட்டுமடம் ரோட்டு, யாழ்ப்பாணம்.
விண்ணப்பதாரி

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 370

எதிராக
1. இரத்தினசபாபதி இராஜஇராஜேஸ்வரன்
2. இரத்தினசபாபதி நாகராஜேஸ்வரன்
3. இரத்தினசபாபதி மகள் நா
4. இரத்தினசபாபதி மகள் தியாகராஜேஸ்வரி
5. இரத்தினசபாபதி இரத்தினேஸ்வரன்
6. இரத்தினசபாபதி மகள் இரத்தினேஸ்வரி

பிரதிவாதிகள்

1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 281-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 6-6-1977ந் திகதியிடப்பட்ட விண்ணப்பத்திலுள்ள கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததின்பேரில் 19-9-1977-ந் திகதி அல்லது அதற்குமுன் ஏதாவது எதிர்க்காரணங்கள் காட்டினாலன்றி மேற்படி காலஞ்சென்றவரின் விதவையென்ற முறையில் விண்ணப்பதாரியே காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவபத்திரம் பெறுவதற்கு உரிமையுடையவரென்றும் அவ்வண்ணம் அவருக்கு நிர்வாகத்தத்துவபத்திரம் வழங்கப்படுமென்றும் யாழ்பபாண நீதி நிர்வாக வலயத் தத்துவபபத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு இத்தாற் கட்டளையிடுகிறேன்.

(ஒப்பம்)
கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி
6950 யாழ்ப்பாணம்.

நீதிநிருவாகத் திருத்தச்சட்டம் (1975-ம் ஆண்டின் 25-ம் இலக்கம்)
பிரிவு 545 (2)ன் கீழ் செய்யப்படும்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
சின்னத்தம்பி குமாரசாமி மகள் பாலாம்பிகாதேவி, புதுரோட், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
மனுதார்
இலக்கம்/காணி/4785
எதிராக
1. கனகசபை பரமசாமியும் பெண்
2- சிவயோகமும் 13 புது ரோட், கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

**சம்பந்தப்பட்ட யாவரும் அறிந்து கொள்ளவும்**

இந்த வழக்கில் தீர்ப்புக் கடன் பெறுநர் இந்த நீதி மன்றத்துக்கு நீதிநிருவாகத் திருத்தச்சட்டம் 545 (1) பிரிவின் பிரகாரம் இந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்து பிஸ்காலினுல் ஆட்சி ஒப்பம் கொடுக்கப்பட்ட காணியிலிருந்து அக்காணியின் முழுமையான ஆட்சியையும் தான் எடுக்கு முன்னரே அக்காணியிலிருந்து எதிர்வாதிகளினுல் 1977-ம் ஆண்டு ஆடி மாதம் 27-ம் திகதியன்று அகற்றப்பட்டதாக முறைப்பாடு செய்துள்ளாராகையாலும், நீதிமன்றமானது 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 2-ம் திகதி இந்த நீதிமன்றத்தின் பிஸ்காலாகிய பதிவாளரை குறித்த சட்டத்தின் 545-ம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்கும்படி பணித்துள்ளபடியாலும்,

இதனுல் சகலருமறிக இதன் பின் விபரிக்கப்படும் ஆதனத்தில் அல்லது அதன் ஒருபகுதியில் ஏதாவது அக்கறை உரிமை அல்லது உரித்து அல்லது அதனுட்சியில் ஏதாவது உரிமை கொண்டவராக இருப்பின் அவ்வாறுனவர்கள் இவ்வழக்கில் தீரப்புக் கடன் பெறுநருக்கு அதனுட்சியை ஒப்படைப்பதற்கு ஏதாவது எதிர்ப்பு அல்லது ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவித்தல் விளம்பரப்படுத்தப்பட்ட நாளிலிருந்து பதினைந்து (15) நாட்களுக்குள் இந்த நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தும்படி இசனுல் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 31 ந் திகதி.

**மு. பத்மநாதன்**
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற் பற்று சுண்டிக்குளி இறை "முதலைக்குளப்புலம்" நிலப் பரப்பு ஐந்தும் கிணறும் வீடும் செய்பயிரும், கிழக்குப்புறம் சுந்தரம்புள்ளை பெண் அழகம்மாவுக்கும், தேவசகாயம் பாக்கியநாதனுக்கும் உரிய ஆதனம வடக்குப்புறம் செல்லையா பெண் விசாலாட்சியின் ஆதனம், மேற்குப் புறம் குழந்தைவேலு கைம்பெண் சுந்தரத்தின் ஆதனம் தெற்குட புறம் கொய்யாத்தோட்டம் புதுவீதி.

**மு. பத்மநாதன்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
6957 யாழ்ப்பாணம்.

### யாழ். கலவர மரணவிசாரணை

# "எரிபொருளைத் தெளித்த பின்னர் பாய்க்கடைக்கு தீ வைத்தார்கள்"

## பழைய மார்க்கட் வியாபாரி சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி அதிகாலை 2 மணிக்கு பழைய மார்க்கட்டுக்கு 15 பேர் தடிகளுடன் வந்தார்கள். அவர்கள் அரைக்கால் சட்டையும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார்கள். பாய்க்கடைக்கு எரிபொருளை தெளித்துவிட்டு நெருப்பை வைத்தார்கள்''

யாழ்ப்பாண கலவரத்தில் பலியானவர்களின் மரண விசாரணையில் சாட்சியமளித்த பழைய மார்க்கட் கடை உரிமையாளர் அம்பலவாணர் சோதிலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ் விசாரணை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் கே. வி. நவரத்தினம் முன்னிலையில் நடைபெற்றது.

அம்பலவாணர் சோதிலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 15-ம் திகதி இரவு பழைய மார்க்கட்டில் 43-ம் கடையில்கட்டிலில் படுத்திருந்தேன். எனது கடை 15 யார் தூரத்தில்இருந்தது எனது கடையில் படுக்கவசதியில்லை. நான் கிடந்தது ஒரு பாய்க் கடை. என்னுடன் மற்றும் 3 பேர்கள் படுத்திருந்தார்கள். அவர்கள் கூலிகாட்கள். நான் படுத்திருந்த கடையின் சொந்தக்காரர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்னிடம் பொறுப்பு ஒன்றும் தரவில்லை. நான் கடை விருந்தையில் தான் படுத்திருந்தேன் அதற்குள் படுக்க கடை உரிமையாளரிடம் அனுமதிபெறவில்லை.

### 15 பேர் வந்தார்கள்

அதிகாலை 2 மணிக்கு மார்க்கட் முகப்பில் சுமார் 15 பேர் தடிகள், பொல்லுகளுடன் வந்தார்கள். அரைக் கழிசானும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார்கள். எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியாது. சிங்களத்தில் கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கதைத்த சத்தத்தில் நான் எழும்பிவிட்டேன். அடிப்பார்கள் என்ற பயத்தில் பேசாமல் படுத்துவிட்டேன்.

### நெருப்பை வைத்தார்

மண்ணெண்ணையோ, பெற்றோலோ பாய்ச்சுருளுக்கு தெளித்துக்கொண்டார்கள். பின் நெருப்பை தட்டிவைத்தார்கள். 'சிகரட் லைட்டர்' மூலம் நெருப்புவைத்தார்கள். எரிந்துகொண்டிருந்தபோது ஒருவர் நான் படுத்திருந்த பெட்சீட்டை இழுத்துஎடுத்து அதனையும்நெருப்பில்போட்டு எரித்தார். மற்றொருவர் வந்து தடியால் அடித்தார். நாங்கள் எழும்பி ஓடினோம். நான் போகும்போது பாய்க் கடை எரிந்துகொண்டிருந்தது.

### அடித்து உடைத்தார்கள்

பின் அவர்கள் கிழக்குப் பக்கமாக ரோட்டுக்குப் போனார்கள். சில்லறைக்கடைகளையெல்லாம் அடித்து உடைத்தார்கள். அடித்ததை காணவில்லை. சத்தம் கேட்டது. 20 நிமிடத்தால் அவர்கள் போய்விட்டார்கள். பின் அங்கு நின்ற 25 பேர் நெருப்பை நூர்ந்தார்கள், வாளியில் தண்ணீர் அள்ளி ஊற்றி நெருப்பை நூற்றோம். பத்து நிமிடத்தில் தீ அணைந்துவிட்டது.

அப்போது பொலிஸ் 'ட்ரக்' ஒன்று வந்தது. பொலிசார் வந்து என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அவர்களில் 8 பேர் இருந்தனர். 'கடைகளுக்கு நெருப்புவைத்துவிட்டார்கள் அணைக்கிறோம்' என்றோம். நெருப்பு வைத்த ஆட்களை தெரியுமா? என்று கேட்டார்கள், ஆட்களை தெரியாது என்றோம். அடித்து உடைத்த கடைகளையும் பார்த்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள், அதிகாலை 2 30 மணிக்கு போனார்கள். அதன்பின் அங்கு நின்றோம்.

### யாழ். எம். பி. வந்தார்

காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் எம்.பியும்வேறு ஆட்களும் விசாரிக்க வந்தார்கள். அப்போது 500 பேர் வரை நின்றார்கள். நடந்ததென்ன? என்று கேட்டார்கள். எரிந்த இடத்தில் வைத்து எம் பி க்கு நடந்தவற்றைச் சொன்னோம். அதற்குப் பின் யாழ்ப்பாணம் எம். பி. போய்விட்டார். ஒரு பகுதிமக்கள் போய்விட்டார்கள். மற்றவர்கள் நின்றார்கள். சுமார் 300 பேர்வரை நின்றார்கள்.

### பொலிஸ் வந்தது

காலை 8-30 மணிக்குட்ரக்கில் பொலிஸ்காரர் வந்து அங்கு நின்ற ஆட்களை அடித்துக்கலைத்தார்கள். அதோடு போய்விட்டோம்.

நீதவான் கேட்ட கேள்விகளுக்கு சோதிலிங்கம்பதிலளித்தார்.

நீதி: முதல் 15 பேர் வந்தது எதற்கென்று தெரியுமா?- தெரியாது.

நீதி: அவர்கள் வரும்போது நாலுபேர் படுத்திருந்தீர்கள்?- ஆம்.

நீதி: அவர்கள் உங்களை அடிக்கவில்லை?-இல்லை. எழும்பி ஓடிவிட்டோம்.

நீதி: எத்தனை நிமிடம் எரிபொருள் தெளித்தார்கள்?- 3 நிமிடம்.

நீதி: எல்லாரும் தெளித்தார்களா?- 2 பேர்.

நீதி: தெளித்த பொருள் என்ன?- எரிபொருளாகஇருக்க வேண்டும்.

நீதி: யாழ்ப்பாண எம். பி. வந்தது தெரியும்?- சிலர் அவருக்கு முறைப்பாடுசெய்து தான் வந்தார்கள்.

நீதி: காலை 8-30 மணிக்குப் புகார் செய்தீர்?-யாழ். எம்.பி. யிடம் புகார் செய்தேன்.

நீதி: ஏன் பொலிஸ் நிலையத்துக்கு செல்லவில்லை?- காலை 6-30 மணிக்கு ஆட்கள் யாழ். எம். பி.யிடம் போயிருந்தார்கள். எம். பி. வந்து விசாரித்துவிட்டு ''நாங்கள் எல்லாம் கவனிக்கிறோம். நீங்கள் போங்கள்'' என்று சொன்னர்.

நீதி; காலை 8-30 மணிவரை அங்கு நின்றீர்?-ஆம்.

நீதி: வேறு இடங்களுக்கு ஏதும் நஷ்டம் ஏற்பட்டதா?- இல்லை.

நீதி: உங்களைக் கலைத்தது எத்தனை பொலிஸார்?- 100 பொலிசார் இருக்கும்.

### துவக்கும் பொல்லும்

நீதி: பொலிசார் என்ன வைத்திருந்தார்கள்?- துவக்கும் பொல்லும்.

நீதி: பொலிஸ்கட்டது தெரியுமா?-தெரியாது.

நீதி: கடைகள் எரிந்தது பற்றித் தெரியுமா?- தெரியாது.

நீதி: பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது பற்றித் தெரியுமா?- தெரியாது.

நீதி: வீட்டிற்கு போகும்போது வழியில் ஒரு இடத்திலும்நெருப்பைக்காணவில்லை?- இல்லை.

நீதி: இச்சம்பவம் பற்றி யாருக்கும் புகார் செய்தீரா?- கச்சேரியில் பொலிஸுக்குப் புகார் செய்தேன்.

நீதி: யாழ்ப்பாணம் எம்.பி. வந்து என்ன சொன்னர்?- ''நீங்கள் இருங்கள். நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்'' என்று கூறினர்.

நீதி: யாழ்ப்பாணம் எம்.பி அங்கு நின்ற கூட்டத்தினரைக் கலைந்து போகும்படி சொன்னரா?-ஆம்.

நீதி: கூட்டத்தினர் கலைந்து போனர்களா?-ஒரு பகுதியினர் போனர்கள்? ஒரு பகுதியினர் போகவில்லை.

நீதி: பொலிஸ் வந்து கூட்டத்தைக் கலைக்கும்போது யாழ்ப்பாண எம். பி. நின்ரா?-இல்லை.

நீதி; யாழ். எம். பி. அந்த இடத்தைவிட்டுஎத்தனைமணிக்குப் போனர்?- 7-45 அல்லது 8 மணிக்கு.

நீதி: உமக்கு சி. எஸ். கே. சந்தி தெரியும்?-ஆம்

நீதி: காலை 8 மணிக்கு டயர்கள் அங்கு எரிந்ததா? இல்லை,

நீதி: ஆஸ்பத்திரி வீதியில் பொலிஸ்ட்ரக் மீது யாரும் கல் எறிந்ததைக் கண்டீரா?-இல்லை

நீதி: காலை 8-30 மணிக்கு கடைச்சொந்தக்காரரை கண்டீரா?- இல்லை

நீதி: எப்ப அவரை கண்டீர்?-25ம்தேதிகச்சேரியில்

நீதி: பொலிஸார் வந்து பழையமார்கட்டில் சிலரை பிடித்துக்கொண்டு போனது தெரியுமா?-தெரியாது.

நீதி: பழையமார்க்கட் உடைந்தது எப்படி என்று தெரியுமா?-தெரியாது

நீதி: காலை 8-30 மணிமட்டும், பழையமார்க்கட் கட்டடம் விழவில்லை?-இல்லை

நீதி; காலை 8-30 மணிமட்டும் மின்சாரநிலைய வீதியில், உள்ள கடைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை?-இல்லை.

யாழ். பழையமார்க்கட் வெற்றிலைக்கடை உரிமையாளரான நாகலிங்கம் ஏகாம்பரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்தஇரவு நான் எனது வீட்டிலிருந்தேன் காலையில் பழையமார்க்கட்டில் குழப்பம் நடக்கிறது திறக்க வேண்டாம் என்று மக்கள் கூறினர்கள நான் எனது கடையில் இருந்தேன்.

இருக்காதீர்கள் போங்கள், என்று கலைத்தார்கள் நான் போகவில்லை கடையில் இருந்தேன். நீங்கள் இருந்தால் உங்களுக்கு பிழை கெதியாய் போங்கோஎன பொலிஸார் கூறினர்கள் நான் இருந்தேன்.

3ம்முறைவந்து உங்கள் உயிருக்குபிழைபோய்விடுங்கள் என பொலிஸார் கூறினர்கள் நான் போய் கிருஷ்ணபவான் கடையிலிருந்தேன்.

(விசாரணை மிகுதி நாளைவரும்)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிங்கள வருடம் ஆவணி மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை (03-09-77) இரவு 6 மணி தொடக்கம் 7 மணி வரையுமுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**சுந்தரலிங்கம்**
(பொதுத் திறைசேரி)
அவர்கட்கும்

எமது கனிஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**ராஜஸ்ரீ**
அவர்கட்கும்

வல்வை ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் (சிவன்) ஆலயத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஐ. குமாரசாமியும்**
(இளைப்பாறிய
அரசாங்க சேவையாளர்)
பாரியாரும்
தெணியம்பைத்தெரு,
வல்வெட்டித்துறை.

**கே. முருகுப்பிள்ளையும்**
இளைப்பாறிய
ஆசிரியர்)
பாரியாரும்
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

6967


## சென்னை பஸ்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தொழிலாளர்கள் மீதான வழக்குகள் வாபஸ்பெறப்பட வேண்டும்என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது இவ்வாறு இருக்க, பல்லவன் போக்குவரத்துச் சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை சமரஸமாகத் தீர்க்க முடியும் என்று தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் திரு. சி. பொன்னையன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடன் தான் பேசவிருப்பதாகவும் அவர் கூறினர் (உ)


### தேவை

பிடவை வியாபாரத்தில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் உள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன், 48-50, பெரியகடை, யாழ்ப்பாணம். 6860

### வகுப்புகள்

யாழ்ப்பாணக் கல்வி நிலைய G. C. E. (O/L A/L) காலை, மாலை வகுப்புக்கள் 5 - 9 - 77 இல் ஆரம்பமாகும். 22, இராமையா செட்டியார் லேன். யாழ்ப்பாணம். 6961

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சரவணமுத்து

அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற தந்தனவர் சரவணமுத்துவின் மனைவியும் சுப்பிரமணியம், ஆறுமுகம் (மலேசியா), திருமதி தங்கம்மா, திருவிளங்கம், இன்னத்துரை, பரதிருபசிங்கம் (அருணோதயக்கல்லூரி ஆசிரியர்கள்), இராசம்மா, இராசரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாருமாகிய நாகம்மா இறைவனடி சேர்ந்துவிட்டார். ஈமக்கிரியைகள் (3-9-77) சனிக்கிழமை அளவெட்டியில் நடைபெறும். 6971


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.